# ஒன்பதாம் இணைப்புப்பட்டியல்

**(31ஆ உறுப்பு)**

1. 1950ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் சட்டம் (பீகார் சட்டம் XXX/1950).
2. 1948 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் சட்டம் (பம்பாய் சட்டம் LXVII/1948).
3. 1949ஆம் ஆண்டு பம்பாய் மாலிகி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXI/1949).
4. 1949ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXII/1949).
5. 1949 ஆம் ஆண்டு பஞ்ச் மஹல்கள் மேஹ்வாசி நிலப்பிடிமானமுறை ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LXIII/1949).
6. 1950ஆம் ஆண்டு பம்பாய் கோதீ ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் VI/1950).
7. 1950ஆம் ஆண்டு பம்பாய் பரகானா மற்றும் குல்கர்னி வதன் ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் LX/1950).
8. 1950ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு (உரிமை நிலச் சொத்துக்கள், மஹல்கள், மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலங்கள்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் I/1951).
9. 1948 ஆம் ஆண்டு சென்னை உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவாரமுறையாக நிலைமாற்றம்) சட்டம் (சென்னைச் சட்டம் XXVI/1948).
10. 1950 ஆம் ஆண்டு சென்னை உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவாரமுறையாக நிலைமாற்றம்) திருத்தச் சட்டம் (சென்னைச் சட்டம் I/1950).
11. 1950 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1951).
12. 1358 ஆம் பசலி ஐதராபாத் (ஜாகீர்கள் ஒழிப்பு) ஒழுங்குறுத்தும்விதி (எண் LXIX/1358 பசலி).
13. 1359 ஆம் பசலி ஐதராபாத் ஜாகீர்கள் (இனமாற்றுதல்) ஒழுங்குறுத்தும்விதி (எண் XXV/1359 பசலி).
14. 1950 ஆம் ஆண்டு பீகார் இடம் பெயர்ந்தவர்களின் மறுவாழ்வளிப்பு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (பீகார் சட்டம் XXXVIII/1950)
15. 1948 ஆம் ஆண்டு ஐக்கிய மாகாணங்கள் நிலம் கையகப்படுத்துதல் (அகதிகள் மறுவாழ்வளிப்பு) சட்டம் (ஐ.மா. சட்டம் XXVI/1948).
16. 1948 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்களின் மறுகுடியமர்வு (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம் (சட்டம் LX/1948).
17. 1938 ஆம் ஆண்டு காப்பீடு சட்டத்தின் (சட்டம் IV/1938) 52அ முதல் 52எ வரை உள்ள பிரிவுகள்—1950 ஆம் ஆண்டு காப்பீடு (திருத்தம்) சட்டத்தின் (சட்டம் XLVII/1950) 42ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.
18. 1951 ஆம் ஆண்டு இருப்பூர்திய நிறுமங்கள் (நெருக்கடிநிலை வகையங்கள்) சட்டம் (சட்டம் I/1951).

19. 1951 ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டத்தின் (சட்டம் LXV/1951) அத்தியாயம் IIIஅ, 1953ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) திருத்தச் சட்டத்தின் (சட்டம் XXVI/1953) 13 ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

20. 1948 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நில மேம்பாடு மற்றும் திட்டமிடுதல் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXI/1948) மேற்கு வங்காளச் சட்டம் XXIX/1951 ஆல் திருத்தம் செய்யப்பட்டது.

21. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரேதச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் X/1961).

22. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச (தெலுங்கானா பரப்பிடம்) குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (செல்லுந்தன்மையாக்குதல்) சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் XXI/1961).

23. 1961 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச (தெலுங்கானா பரப்பிடம்) இஜாரா மற்றும் கௌலி நிலம் முறைகேடான பட்டாக்கல் நீக்கறவு செய்தல் மற்றும் சலுகைத் தீர்வை ஒழித்தல் சட்டம் (ஆந்திரப் பிரேதசச் சட்டம் XXXVI/1961).

24. 1959 ஆம் ஆண்டு பொதுத் தன்மையதான சமய அல்லது அற நிறுவனத்துக்கு உரிய நிலங்களை அசாம் அரசு கையகப்படுத்துதல் சட்டம் (அசாம் சட்டம் IX/1961).

25. 1953 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் XX/1954).

26. 1961 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகையான நிலத்தைக் கையகப்படுத்துதல்) சட்டம் (பீகார் சட்டம் XII/1962) (இந்தச் சட்டத்தின் 28ஆம் பிரிவு தவிர).

27. 1954 ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலப்பிடிமானமுறை ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (பம்பாய் சட்டம் I/1955).

28. 1957 ஆம் ஆண்டு பம்பாய் தாலுக்தாரி நிலபிடிமானமுறை ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (பம்பாய் சட்டம் XVIII/1958).

29. 1958 ஆம் ஆண்டு பம்பாய் இனாம்கள் (கட்ச் பரப்பிடம்) ஒழிப்புச் சட்டம் (பம்பாய் சட்டம் XCVIII/1958).

30. 1960 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (குஜாத் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் XVI/1960).

31. 1960 ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் உச்சவரம்புச் சட்டம் (குஜராத் சட்டம் XXVII/1961).

32. 1962 ஆம் ஆண்டு சக்பாரா மற்றும் மேஹ்வாசி உரிமைநிலச் சொத்துக்கள் (நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு முதலியன) ஒழுங்குறுத்தும்விதி (குஜராத் ஒழுங்குறுத்தும்விதி I/1962).

33. 1963 ஆம் ஆண்டு குஜராத் எஞ்சிய மாற்றாக்கங்கள் ஒழிப்புச் சட்டம் (குஜராத் சட்டம் XXXIII/1963) அதன் 2ஆம் பிரிவின் (3)ஆம் கூறின் (ஈ) உட்கூறில் குறிப்பிடப்பட்ட மாற்றாக்கத்திற்கு இந்தச் சட்டம் தொடர்புடையதாயிருக்கிற அளவுக்குத் தவிர.

34. 1961 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXVII/1961).

35. 1961 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (மறுசட்டமியற்றல், செல்லுந்தன்மையதாக்குதல் மற்றும் கூடுதல் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XLV/1961).

36. 1950 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் சட்டம் (ஐதராபாத் சட்டம் XXI/1950).

37. 1960 ஆம் ஆண்டு ஜன்மீகரம் செலுத்தம் (ஒழிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் III/1961).

38. 1961 ஆம் ஆண்டு கேரள நிலவரிச் சட்டம் (கேரளச் சட்டம் XIII/1961).

39. 1963 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (கேரளச் சட்டம் I/1964).

40. 1959 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச நில வருவாய்த் தொகுப்புச்சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் XX/1959).

41. 1960 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் XX/1960).

42. 1955 ஆம் ஆண்டு சென்னை பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் (சென்னைச் சட்டம் XXV/1955).

43. 1956 ஆம் ஆண்டு சென்னை பயிரிடும் குத்தகைக்காரர்கள் (நியாயமான குத்தகைத் தொகைச் செலுத்தம்) சட்டம் (சென்னைச் சட்டம் XXIV/1956).

44. 1961 ஆம் ஆண்டு சென்னைக் குடியிருப்புக் கையுடைமையாளர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (சென்னைச் சட்டம் XXXVIII/1961).

45. 1961 ஆம் ஆண்டு சென்னைப் பொதுப் பொறுப்பமைவுகள் (வேளாண் நிலங்களை நிருவகிப்பதை ஒழுங்குறுத்துதல்) சட்டம் (சென்னைச் சட்டம் LVII/1961).

46. 1961 ஆம் ஆண்டு சென்னை நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பு நிருணயித்தல்) சட்டம் (சென்னைச் சட்டம் LVIII/1961).

47. 1952 ஆம் ஆண்டு மைசூர் குத்தகையுரிமைச் சட்டம் (மைசூர் சட்டம் XIII/1952).

48. 1957 ஆம் ஆண்டு குடகு குத்தகைக்காரர்கள் சட்டம் (மைசூர் சட்டம் XIV/1957).

49. 1961 ஆம் ஆண்டு மைசூர் ஊர் அலுவலர் பதவிகள் ஒழிப்புச் சட்டம் (மைசூர் சட்டம் XIV/1961).

50. 1961 ஆம் ஆண்டு ஐதராபாத் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (செல்லுந்தன்மையதாக்குதல்) சட்டம் (மைசூர் சட்டம் XXXVI/1961).

51. 1961 ஆம் ஆண்டு மைசூர் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மைசூர் சட்டம் X/1962).

52. 1960 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (ஒரிசாச் சட்டம் XVI/1960).

53. 1963 ஆம் ஆண்டு ஒரிசா ஒருங்கிணைந்த ஆட்சிநிலவரைகள் (ஊர் அலுவலர் பதவிகள் ஒழிப்பு) சட்டம் (ஒரிசாச் சட்டம் X/1963).

54. 1953 ஆம் ஆண்டு பஞ்சாப் நிலப்பிடிமான முறைகள் காப்புறுதிச் சட்டம் (பஞ்சாப் சட்டம் X/1953).

55. 1955 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் III/1955).

56. 1959 ஆம் ஆண்டு ராஜஸ்தான் ஜமீன்தாரி மற்றும் விஸ்வேதாரி ஒழிப்புச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் VIII/1959).

57. 1960 ஆம் ஆண்டு ஹுமாயூன் மற்றும் உத்தரகண்ட் ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் XVII/1960).

58. 1960 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச கைபற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1961).

59. 1953 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் I/1954).

60. 1955 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் X/1956).

61. 1954 ஆம் ஆண்டு தில்லி நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (தில்லிச் சட்டம் III/1954).

62. 1960 ஆம் ஆண்டு தில்லி கைப்பற்று நிலங்கள் (உச்சவரம்பு) சட்டம் (மையச் சட்டம் 24/1960).

63. 1960 ஆம் ஆண்டு மணிப்பூர் நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மையச் சட்டம் 33/1960).

64. 1960 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (மையச் சட்டம் 43/1960).

65. 1969 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 35/1969).

66. 1971 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 25/1971).

67. 1973 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச நிலச் சீர்திருத்தங்கள் (வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) சட்டம் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் I/1973).

68. 1972 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் I/1973).

69. 1973 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் IX/1973).

70. 1972 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் V/1972).

71. 1972 ஆம் ஆண்டு குஜராத் வேளாண் நிலங்கள் உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 2/1974).

72. 1972 ஆம் ஆண்டு அரியானா கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (அரியானாச் சட்டம் 26/1972).

73. 1972 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்புச் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 19/1973).

74. 1972 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 17/1972).

75. 1972 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 12/1974).

76. 1972 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 13/1974).

77. 1973 ஆம் ஆண்டு மைசூர் நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 1/1974).

78. 1972 ஆம் ஆண்டு பஞ்சாப் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (பஞ்சாப் சட்டம் 10/1973).

79. 1973 ஆம் ஆண்டு ராஜஸ்தான் வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 11/1973).

80. 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் உரிமைநிலச் சொத்துகள் (ஒழிப்பு மற்றும் நேர்க்குடிவார முறையாக நிலைமாற்றம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1969).

81. 1972 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XII/1972).

82. 1964 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXII/1964).

83. 1973 ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்துகள் கையகப்படுத்துதல் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXXIII/1973).

84. 1972 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (குஜராத் திருத்தம்) சட்டம் 5/1973).

85. 1974 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 9/1974).

86. 1974 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (திரிபுரா சட்டம் 7/1974).

[1][87. * * *]

88. 1951 ஆம் ஆண்டு விசைத்தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டம் (மையச் சட்டம் 65/1951).

89. 1952 ஆம் ஆண்டு நிலையியல் சொத்தினை வேண்டுறுத்திக் கையகப்படுத்துதல் சட்டம் (மையச் சட்டம் 30/1952).

90. 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்தம் மற்றும் மேம்பாடு) சட்டம் (மையச் சட்டம் 67/1957).

91. 1969 ஆம் ஆண்டு ஒருதனியுரிமைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வாணிகப் பழக்கங்கள் சட்டம் (மையச் சட்டம் 54/1969).

[1][92. * * *]

93. 1971 ஆம் ஆண்டு கல்கரிக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் (நெருக்கடி நிலை வகையங்கள்) சட்டம் (மையச் சட்டம் 64/1971).

94. 1972 ஆம் ஆண்டு கல்கரிக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் (தேசிய மயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 36/1972).

95. 1972 ஆம் ஆண்டு பொதுவான காப்பீட்டுத் தொழில் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 57/1972).

96. 1972 ஆம் ஆண்டு இந்தியச் செப்புக் கூட்டுரும (பொறுப்பேற்பு நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 58/1972).

97. 1972 ஆம் ஆண்டு நலிவுற்ற நெசவப் பொறுப்பேற்பு நிறுவனங்கள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) சட்டம் (மையச் சட்டம் 72/1972).

98. 1973 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) சட்டம் (மையச் சட்டம் 15/1973).

---

[[1] 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 44 ஆம் பிரிவினால் (20–6–1979 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.]

99. 1973 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 26/1973).

100. 1973 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்று ஒழுங்குறுத்தம் சட்டம் (மையச் சட்டம் 46/1973).

101. 1973 ஆம் ஆண்டு அல்காக் ஆஷ்டவுன் நிறுமம் வரம்பிடப்பட்டது (பொறுப்பேற்பு நிறுவனங்களைக் கையகப்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 56/1973).

102. 1974 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (பேணிக்காத்தல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் (மையச் சட்டம் 28/1974).

103. 1974 ஆம் ஆண்டு கூடுதல் பதவியூதியங்கள் (கட்டாய வைப்பீடு) சட்டம் (மையச் சட்டம் 37/1974).

104. 1974 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்றைப் பேணிக்காத்தல் மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (மையச் சட்டம் 52/1974).

105. 1974 ஆம் ஆண்டு நலிவுற்ற நெசவுப் பொறுப்பேற்பு நிறுவனங்கள் (தேசியமயமாக்குதல்) சட்டம் (மையச் சட்டம் 57/1974).

106. 1964 ஆம்ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாரஷ்டிரச் சட்டம் XVI/1965).

107. 1965 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXII/1965).

108. 1968 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) (மகாராஷ்டிரச் சட்டம் XVI/1968).

109. 1968 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXIII/1968).

110. 1969 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXVII/1969).

111. 1969 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXXVIII/1969).

112. 1970 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXVII/1970).

113. 1972 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XIII/1972).

114. 1973 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு) (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம L/1973).

115. 1965 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1965).

116. 1966ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 8/1967).

117. 1967 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1967).

118. 1969 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 13/1969).

119. 1970 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 18/1970).

120. 1972 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 18/1973).

121. 1974 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 2/1975).

122. 1975 ஆம் ஆண்டு திரிபுரா நில வருவாய் மற்றும் நிலச் சீர்த்திருத்தங்கள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (திரிபுரா சட்டம் 3/1975).

123. 1971 ஆம் ஆண்டு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி நிலச் சீர்த்திருத்தங்கள் ஒழுங்குறுத்தும்விதி (3/1971).

124. 1973 ஆம் ஆண்டு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (5/1973).

125. 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 66அ பிரிவு மற்றும் அத்தியாயம் IVஅ (மையச் சட்டம் 4/1939).

126. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் (மையச் சட்டம் 10/1955).

127. 1976 ஆம் ஆண்டு கள்ளக்கடத்தல்காரர்கள் மற்றும் அயல்நாட்டு நாணயமாற்றுப் புரட்டுச்செய்வோர் (சொத்துப்பறிமுதல்) சட்டம் (மையச் சட்டம் 13/1976).

128. 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் (மையச் சட்டம் 19/1976).

129. 1976 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணயமாற்றைப் பேணிகாத்தல் மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்பு (திருத்தம்) சட்டம் (மையச் சட்டம் 20/1976).

[1][130. * * * *]

131. 1976 ஆம் ஆண்டு கட்டாய கொள்முதல் சர்க்கரை விலை சமன் மையாக்கு நிதியச் சட்டம் (மையச் சட்டம் 31/1976).

132. 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குறுத்தம்) சட்டம் (மையச் சட்டம் 33/1976).

133. 1976 ஆம் ஆண்டு ஒன்றியத்துக் கணக்குகள் துறைப்படுத்தப்படுதல் (பணியாளர்களை மாற்றுதல்) சட்டம் (மையச் சட்டம் 59/1976).

134. 1956 ஆம் ஆண்டு அசாம் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு நிர்ணயித்தல் சட்டம் (அசாம் சட்டம் I/1957).

135. 1958 ஆம் ஆண்டு பம்பாய் குத்தகையுரிமை மற்றும் வேளாண் நிலங்கள் (விதர்பா வட்டாரம்) சட்டம் (பம்பாய் சட்டம் XCIX/1958).

136. 1972 ஆம் ஆண்டு குஜராத் தனியார் காடுகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (குஜராத் சட்டம் 14/1973).

---

1. 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு (நாற்பத்து நான்காம் திருத்தம்) சட்டத்தின் 44ஆம் பிரிவினால் (20-6-1979 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

137. 1976 ஆம் ஆண்டு அரியாணாக் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (அரியாணாச் சட்டம் 17/1976).

138. 1972 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசக் குத்தகையுரிமை மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 8/1974).

139. 1974 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேச ஊர்ப் பொது நிலங்கள் உற்றமைதல் மற்றும் பயன்பாட்டுச் சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 18/1974).

140. 1974 ஆம் ஆண்டு கர்நாடக நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம் மற்றும் பல்வகை வகையங்கள்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 31/1974).

141. 1976 ஆம் ஆண்டு கர்நாடக நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 27/1976).

142. 1966 ஆம் ஆண்டு கேரள வெளியேற்றுகைத் தடுப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 12/1966).

143. 1969 ஆம் ஆண்டு திருப்புவாராச் செலுத்தம் (ஒழிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 19/1969).

144. 1969 ஆம் ஆண்டு ஸ்ரீபாதம் நிலங்கள் விடுவிப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 20/1969).

145. 1971 ஆம் ஆண்டு ஸ்ரீபண்டாரவகை நிலங்கள் (உற்றமைதல் மற்றும் விடுவிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 20/1971).

146. 1971 ஆம் ஆண்டு கேரளா தனியார் காடுகள் (உற்றமைதல் மற்றும் குறித்தளித்தல்) சட்டம் (கேரளச் சட்டம் 26/1971).

147. 1974 ஆம் ஆண்டு கேரள வேளாண் உழைப்பாளர்கள் சட்டம் (கேரளச் சட்டம் 18/1974.)

148. 1974 ஆம் ஆண்டு கேரள முந்திரித் தொழிற்சாலைகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (கேரளச் சட்டம் 29/1974).

149. 1975 ஆம் ஆண்டு கேரளச் சீட்டுகள் சட்டம் (கேரளச் சட்டம் 23/1975).

150. 1975 ஆம் ஆண்டு கேரளப் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (நிலங்களின் உரிமைமாற்றல் மீதான வரையறை மற்றும் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலங்களின் மீட்டளிப்பு) சட்டம் (கேரளச் சட்டம் 31/1975).

151. 1976 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 15/1976).

152. 1976 ஆம் ஆண்டு காணம் குத்தகையுரிமை ஒழிப்புச் சட்டம் (கேரளச் சட்டம் 16/1976).

153. 1974 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப்பிரதேசச் சட்டம் 20/1974).

154. 1975 ஆம் ஆண்டு மத்தியப்பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப்பிரதேசச் சட்டம் 2/1976).

155. 1961 ஆம் ஆண்டு மேற்கு காந்தேஷ் மேஹ்வாசி உரிமை நிலச் சொத்துகள் (நிலவுடைமை உரிமைகள் ஒழிப்பு முதலியன) ஒழுங்குறுத்தும்விதி (மகாராஷ்டிர ஒழுங்குறுத்தும்விதி 1/1962).

156. 1974 ஆம் ஆண்டு மகாராஷ்டிர பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு நிலங்கள் மீட்டளிப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XIV/1975).

157. 1972 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பைக் குறைத்தல்) மற்றும் (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXI/1975).

158. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிரத் தனியார் காடுகள் (கையகப்படுத்துதல்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XXIX/1975).

159. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பைக் குறைத்தல்) மற்றும் (திருத்தம்) திருத்தச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் XLVII/1975).

160. 1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிர வேளாண் நிலங்கள் (கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் II/1976).

161. 1951 ஆம் ஆண்டு ஒரிசா உரிமைநிலச் சொத்துகள் ஒழிப்புச் சட்டம் (ஒரிசாச் சட்டம் I/1952).

162. 1954 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் XXVII/1954).

163. 1963 ஆம் ஆண்டு ராஜஸ்தான் நிலச் சீர்த்திருத்தங்கள் மற்றும் நில உரிமையாளர்களின் உரிமை நிலச்சொத்துகள் கையகப்படுத்துதல் சட்டம் (ராஜஸ்தான் சட்டம் II/1964).

164. 1976 ஆம் ஆண்டு ராஜஸ்தான் வேளாண் கைப்பற்று நிலங்கள் மீது உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 8/1976).

165. 1976ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1976).

166. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைப்பு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1970).

167. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/1971).

168. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1972).

169. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1972).

170. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1972).

171. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) நான்காம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1972).

172. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) ஆறாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/1974).

173. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) ஐந்தாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1974).

174. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1974).

175. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1974).

176. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1974).

177. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1975).

178. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1975).

179. 1971 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 21/1971), 1974 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 34/1974) ஆகியவற்றினால், 1950 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் சட்டத்திற்கு (உத்தரப்பிரதேசச் சட்டம் I/1951) செய்யப்பட்ட திருத்தங்கள்.

180. 1976ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசக் கைப்பற்று நிலங்கள் மீது உச்சவரம்பு விதித்தல் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 20/1976).

181. 1972ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXVIII/1972).

182. 1973ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தின் மீட்டளிப்புச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIII/1973).

183. 1974ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXXIII/1974).

184. 1975ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIII/1975).

185. 1976ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XII/1976).

186. 1976ஆம் ஆண்டு தில்லிக் கைப்பற்று நிலங்கள் (உச்சவரம்பு) திருத்தச் சட்டம் (மையச் சட்டம் 15/1976).

187. 1975ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ முண்ட்கார்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 1/1976).

188. 1973ஆம் ஆண்டு பாண்டிச்சேரி நிலச் சீர்திருத்தங்கள் (நிலஉச்சவரம்பு நிருணயித்தல்) சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 9/1974).

189. 1971ஆம் ஆண்டு அசாம் (தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்ட பரப்பிடங்கள்) குத்தகையுரிமைச் சட்டம் (அசாம் சட்டம் XXIII/1971).

190. 1974ஆம் ஆண்டு அசாம் (தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்ட பரப்பிடங்கள்) குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (அசாம் சட்டம் XVIII/1974).

191. 1974 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகைநிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) திருத்துச் சட்டம் (பீகார் சட்டம் 13/1976).

192. 1976 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகைநிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 22/1976).

193. 1978 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்புப் பரப்பிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலம் கையகப்படுத்துதல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் VII/1978).

194. 1979 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (பீகார் திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 2/1980).

195. 1977 ஆம் ஆண்டு அரியானா கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (அரியானா சட்டம் 14/1977).

196. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1978).

197. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1979).

198. 1978 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப்பிரதேசச் சட்டம் 15/1978).

199. 1978 ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தை மீட்டளிக்கும் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் XXIV/1978).

200. 1980 ஆம் ஆண்டு மேற்கு வங்காளம் மாற்றாக்கம் செய்யப்பட்ட நிலத்தை மீட்டளிக்கும் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் LVI/1980).

201. 1964 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ வேளாண் குத்தகையுரிமைச் சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 7/1964).

202. 1976 ஆம் ஆண்டு கோவா, தமண் மற்றும் டையூ வேளாண் குத்தகையுரிமை (ஐந்தாம் திருத்தம்) சட்டம் (கோவா, தமண் மற்றும் டையூ சட்டம் 17/1976).

203. 1959 ஆம் ஆண்டு ஆந்திப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் பற்றிய ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1959).

204. 1963 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த சட்டங்கள் (நீட்டிப்பு மற்றும் திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 2/1963).

205. 1970 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1970).

206. 1971 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1971).

207. 1978 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசப் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நில உரிமைமாற்றம் (திருத்தம்) ஒழுங்குறுத்தும்விதி (ஆந்திரப் பிரதேச ஒழுங்குறுத்தும்விதி 1/1978).

208. 1985 ஆம் ஆண்டு பீகார் குத்தகையுரிமைச் சட்டம் (பீகார் சட்டம் 8/1985).

209. 1908 ஆம் ஆண்டு சோட்டா நாகபுரி குத்தகையுரிமைச் சட்டம் (வங்காளச் சட்டம் 6/1908) (அத்தியாயம் VIII–46, 47, 48, 48அ, 49 ஆகிய பிரிவுகள்; அத்தியாயம் X–71, 71அ, 71ஆ ஆகிய பிரிவுகள் மற்றும் அத்தியாயம் XVIII–240, 241, 242 ஆகிய பிரிவுகள்).

210. 1949 ஆம் ஆண்டு சந்தல் பர்கானாக்கள் குத்தகையுரிமை (துணைவறு வகையங்கள்) சட்டம் (பீகார் சட்டம் 14/1949), 53ஆம் பிரிவு நீங்கலாக.

211. 1969 ஆம் ஆண்டு பீகார் பட்டியல் வரையிடங்கள் சார்ந்த ஒழுங்குறுத்தும்விதி (பீகார் ஒழுங்குறுத்தும்விதி 1/1969).

212. 1982 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்திருத்தங்கள் (உச்சவரம்பு வரையிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலத்தை கையகப்படுத்தல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 55/1982).

213. 1969 ஆம் ஆண்டு குஜராத் தேவஸ்தானம் இனாம்கள் ஒழிப்புச் சட்டம் (குஜராத் சட்டம் 16/1969).

214. 1976 ஆம் ஆண்டு குஜராத் குத்தகையுரிமைச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 37/1976).

215. 1976 ஆம் ஆண்டு குஜராத் வேளாண் நிலங்கள் உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (குடியரசுத்தலைவரின் சட்டம் 43/1976).

216. 1977 ஆம் ஆண்டு குஜராத் தேவஸ்தானம் இனாம்கள் ஒழிப்பு (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 27/1977).

217. 1977 ஆம் ஆண்டு குஜராத் குத்தகையுரிமைச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 30/1977).

218. 1980 ஆம் ஆண்டு பம்பாய் நில வருவாய் (குஜராத் இரண்டாம் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 37/1980).

219. 1982 ஆம் ஆண்டு பம்பாய் நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் மற்றும் நிலப்பிடிமானமுறை ஒழிப்புச்சட்டங்கள் (குஜராத் திருத்தம்) சட்டம் (குஜராத் சட்டம் 8/1982).

220. 1968 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேச நில உரிமைமாற்றம் (ஒழுங்குறுத்தம்) சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 15/1969).

221. 1986 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரேதச நில உரிமைமாற்றம் (ஒழுங்குறுத்தம்) (திருத்தம்) சட்டம் (இமாச்சலப் பிரதேசச் சட்டம் 16/1986).

222. 1978 ஆம் ஆண்டு கர்நாடகப் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (குறித்த சில நிலங்கள் உரிமை மாற்றத்தைத் தடைசெய்தல்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 2/1979).

223. 1978 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 13/1978).

224. 1981 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 19/1981).

225. 1976 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 61/1976).

226. 1980 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 15/1980).

227. 1981 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச அக்ரிஷிக் ஜாட் உச்சாட்டம் சீமா அதிநியம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 11/1981).

228. 1976 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 1/1984).

229. 1984 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 14/1984).

230. 1989 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச வேளாண் கைப்பற்று நிலங்கள் மீதான உச்சவரம்பு (திருத்தம்) சட்டம் (மத்தியப் பிரதேசச் சட்டம் 8/1989).

231. 1966ஆம் ஆண்டு மகாராஷ்டிரா நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 41/1966) 36, 36அ, 36ஆ ஆகிய பிரிவுகள்.

232. 1976ஆம் ஆண்டு மகாராஷ்டிரா நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம் மற்றும் மகாராஷ்டிரப் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கு நிலங்களை மீட்டளித்தல். (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 30/1977).

233. 1985ஆம் ஆண்டு மகாராஷ்டிர குறித்தசில நிலங்களிலுள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்காக இருந்துவரும் உடைமை உரிமைகள் ஒழிப்புச் சட்டம் (மகாராஷ்டிரச் சட்டம் 16/1985).

234. 1956 ஆம் ஆண்டு ஒரிசா பட்டியல் வரையிடங்கள் சார்ந்த நிலையியல் சொத்தினை (பட்டியிலில் கண்ட பழங்குடியினர்) உரிமைமாற்றம் செய்தல் பற்றிய ஒழுங்குறுத்தும்விதி (ஒரிசா ஒழுங்குறுத்தும்விதி 2/1956).

235. 1975ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 29/1976).

236. 1976 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 30/1976)

237. 1976ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (ஒரிசாச் சட்டம் 44/1976).

238. 1984ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றம் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1984).

239. 1984ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 13/1984).

240. 1987ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமை (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 21/1987).

241. 1979ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1980).

242. 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1980).

243. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 59/1981).

244. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பை நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1984).

245. 1982ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச நிலச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (உத்தரப் பிரதேசச் சட்டம் 20/1982).

246. 1965ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 18/1965.)

247. 1966ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 11/1966.)

248. 1969ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1969)

249. 1977ஆம் ஆண்டு மேற்கு வங்காள உரிமை நிலச் சொத்தினைக் கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 36/1977).

250. 1979ஆம் ஆண்டு மேற்கு வங்காள கைப்பற்று நிலவருவாய்ச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 44/1979).

251. 1980ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 41/1980).

252. 1981ஆம் ஆண்டு மேற்கு வங்காள கைப்பற்று நிலவருவாய் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 33/1981).

253. 1981ஆம் ஆண்டு கல்கத்தா திக்கா குத்தகையுரிமை (கையகப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 37/1981).

254. 1982ஆம் ஆண்டு மேற்கு வங்காளக் கைப்பற்று நிலவருவாய் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1982).

255. 1984 ஆம் ஆண்டு கல்கத்தா திக்கா குத்தகையுரிமை (கையகப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 41/1984).

256. 1968 ஆம் ஆண்டு மாகி நிலச் சீர்த்திருத்தங்கள் சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 1/1968)

257. 1980 ஆம் ஆண்டு மாகி நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பாண்டிச்சேரி சட்டம் 1/1981).

[1][257(அ). 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (கல்வி நிறுவனங்களில் பதவியிட ஒதுக்கீடு மற்றும் மாநிலத்தின் கீழுள்ள பணியங்களில் அமர்த்துகைகளில் அல்லது பணியடைகளில் ஒதுக்கீடு) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994)]

[2][258. 1947 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணை குத்தகையுரிமைச் சட்டம் (பீகார் சட்டம் 4/1948)]

259. 1956 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடைசெய்தல் சட்டம் (பீகார் சட்டம் 22/1956)

260. 1970 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 7/1970).

261. 1970 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணைக் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 9/1970).

262. 1973 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறுகூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 27/1975).

263. 1981 ஆம் ஆண்டு பீகார் நிலவுடைமைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சிறு கூறுகளாகப் பிரிப்பதைத் தடை செய்தல் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 35/1982).

264. 1987 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் (உச்சவரம்பு வரையிடத்தை நிருணயித்தல் மற்றும் மிகை நிலத்தைக் கையகப்படுத்துல்) (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 21/1987).

265. 1989 ஆம் ஆண்டு பீகார் மதிப்புரிமை பெற்ற நபர்கள் பண்ணைக் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 11/1989).

266. 1989 ஆம் ஆண்டு பீகார் நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (பீகார் சட்டம் 11/1990)

267. 1984 ஆம் ஆண்டு கர்நாடகப் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் குறித்தசில நிலங்களின் உரிமை மாற்றத்தைத் தடைசெய்தல் (திருத்தம்) சட்டம் (கர்நாடகச் சட்டம் 3/1984).

268. 1989 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (கேரளச் சட்டம் 16/1989).

---

1. 1994ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஆறாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.
2. 1995ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து எட்டாம் திருத்தம்) சட்டத்தால் புகுத்தப்பட்டது.

269. 1989 ஆம் ஆண்டு கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (கேரள சட்டம் 2/1989).

270. 1989 ஆம் ஆண்டு ஒரிசா நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (ஒரிசா சட்டம் 9/1990).

271. 1979 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 16/1979).

272. 1987 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 2/1987).

273. 1989 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குடியேற்றச் (திருத்தம்) சட்டம் (ராஜஸ்தான் சட்டம் 12/1989).

274. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1984)

275. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1986).

276. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1988).

277. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிருணயித்தல்) (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1989).

278. 1981 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 50/1981)

279. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 5/1986).

280. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 19/1986)

281. 1986 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (மூன்றாம் திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 35/1986)

282. 1989 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 23/1989)

283. 1990 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் (திருத்தம்) சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 24/1990)

284. 1991 ஆம் ஆண்டு மேற்கு வங்காள நிலச் சீர்த்திருத்தங்கள் தீர்ப்பாயச் சட்டம் (மேற்கு வங்காளச் சட்டம் 12/1991)]

விளக்கம்: 1993 ஆம் ஆண்டு ராஜஸ்தான் குத்தகையுரிமைச் சட்டத்தின்படி (ராஜஸ்தான் சட்டம் III/1995) செய்யப்பட்ட கையகப்படுத்துதல் எதுவும் 31அ உறுப்பின் (i) ஆம் கூறிலுள்ள இரண்டாம் வரம்புரைக்கு முரணாக இருக்குமாயின், முரணாக இருக்கும் அளவுக்கு, அது இல்லா நிலையது ஆகும்.

# [1]பத்தாம் இணைப்புப்பட்டியல்

## [102 (2), 191(2) ஆகிய உறுப்புகள்]

## கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு குறித்த வகையங்கள்

1. **பொருள்கோள் :**

இந்த இணைப்புப்பபட்டியலில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "அவை" என்பது, நாடாளுமன்ற, ஈரவைகளில் ஒன்று அல்லது மாநிலச் சட்டமன்றப் பேரவை அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலச் சட்டமன்ற ஈரவைகளில் ஒன்று என்று பொருள்படும்;

(ஆ) "சட்டமன்றக் கட்சி" என்பது, 2ஆம் பத்தியின் அல்லது [2][*****] 4ஆம் பத்தியின் வகையங்களுக்கு இணங்க அரசியல் கட்சி எதனையும் சேர்ந்துள்ள அவை உறுப்பினர் ஒருவரைப் பொறுத்தவரை, மேற்சொன்ன வகையங்களுக்குக்கிணங்க அப்போதைக்கு அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்துள்ள அவை உறுப்பினர்கள் அனைவரையும் கொண்டிருக்கிற குழுவம் என்று பொருள்படும்;

(இ) "முதல் சார்பு அரசியல் கட்சி" என்பது, அவை உறுப்பினர் ஒருவரைப் பொறுத்தவரை, 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் நோக்கங்களுக்காக அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சி என்று பொருள்படும்;

(ஈ) "பத்தி" என்பது, இந்த இணைப்புப்பட்டியலில் உள்ள ஒரு பத்தி என்று பொருள்படும்.

2. **கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு :**

(1) [3][4, 5 ஆகிய பத்திகளின்] வகையங்களுக்கு உட்பட்டு, அரசியல் கட்சி எதனையும் சார்ந்தவரான அவை ஒன்றின் உறுப்பினர்—

(அ) அத்தகைய அரசியல் கட்சியில் தமக்குள்ள உறுப்பினர் பதவியைத் தம்விருப்பாக விட்டிருப்பாராயின், அல்லது

(ஆ) தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சியோ இதன்பொருட்டு அக்கட்சியினால் அதிகாரமளிக்கப்பெற்ற நபரோ அமைப்போ பிறப்பிக்கும் பணிப்புரை எதற்கும் மாறாக, அந்த அரசியல் கட்சியின், நபரின் அல்லது அமைப்பின் முன் இசைவைப் பெறாமல், அந்த அவையில் வாக்களித்தார் அல்லது வாக்களிக்காதிருந்தார் என்றால், அவ்வாறு வாக்களித்த அல்லது வாக்களிக்காமலிருந்த செயல், அந்த அரசியல் கட்சியினாலோ நபராலோ அமைப்பினாலோ அவ்வாறு வாக்களித்த அல்லது வாக்களிக்காமலிருந்த தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக மன்னிக்கப்படவில்லையாயின்

அந்த அவை உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

*விளக்கம்.*—இந்த உள்பத்தியினைப் பொறுத்தவரை,—

(அ) தேர்ந்தெடுக்கப்பெற்ற அவை உறுப்பினர் எவரும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கு அவரைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி வைத்த அரசியல் கட்சி, ஏதேனுமிருப்பின், அக்கட்சியைச் சார்ந்துள்ள உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார்;

(ஆ) நியமனம் செய்யப்பெற்ற அவை உறுப்பினர் எவரும்,—

(i) அத்தகைய உறுப்பினராக அவர் நியமனம் செய்யப்பெற்ற தேதியன்று அரசியல் கட்சி ஒன்றன் உறுப்பினராக அவர் இருக்கிறவிடத்து, அந்த அரசியல் கட்சியைச் சார்ந்துள்ளவர் எனக் கொள்ளப்பெறுவார்;

---

1. 1985ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் 6ஆம் பிரிவினால் (1-3-1985முதல் செல்திறம் பெறுமாறு) சேர்க்கப்பட்டது.
2. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது.
3. 2003ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

*(ii)* பிற நேர்வு எதிலும், 99ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 188ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்கத் தம் பதவியினை ஏற்று அமர்கிற தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிவுறுவதற்கு முன்பு, அவர் உறுப்பினராகச் சேர்கிற அல்லது, நேர்வுக்கேற்ப, முதற்கண் உறுப்பினராகச் சேர்கிற அரசியல் கட்சி எதுவோ அதைச் சார்ந்தவர் எனக் கொள்ளப்பெறுவார்.

(2) அரசியல் கட்சி எதன்சார்பாகவும் நிறுத்திவைக்கப்பெற்ற வேட்பாளராக இல்லாமைலேயே ஓர் அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற எவரும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்பு அரசியல் கட்சி எதிலும் சேர்வாராயின், அந்த அவையின் உறுப்பினராக இருந்து வருவதற்கு அவர் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(3) நியமனம் செய்யப்பெற்ற அவை உறுப்பினர் ஒருவர், 99ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 188ஆம் உறுப்பின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்கத் தம் பதவியினை ஏற்று அமர்கிற தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிவுற்ற பின்பு, அரசியல் கட்சி எதிலும் சேருவாராயின், அந்த அவையின் உறுப்பினராக இருந்து வருவதற்கு அவர் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(4) இந்தப் பத்தியின் மேலே கண்ட வகையங்களில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1985ஆம் ஆண்டு அரசமைப்பு (ஐம்பத்திரண்டாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கநிலையில் ஓர் அவையின் (தேர்ந்தெடுக்கப்பெற்ற அல்லது நியமனம் செய்யப்பெற்ற) உறுப்பினராக இருக்கும் ஒருவர்,—

*(i)* அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினராக அவர் இருந்திருப்பாராயின், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அத்தகைய அரசியல் கட்சியால் வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பெற்று அந்த அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் எனக் கொள்ளப்பெறுவார்;

*(ii)* பிற நேர்வு எதிலும், இந்தப் பத்தியின் (2)ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அரசியல் கட்சி எதனாலும் நிறுத்தி வைக்கப்பெற்ற ஒரு வேட்பாளராக இல்லாமலேயே அந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார் அல்லது, நேர்வுக்கேற்ப, இந்தப் பத்தியின் (3) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அந்த அவையின் ஓர் நியமன உறுப்பினர் எனக் கொள்ளப்பெறுவார்.

3. [1][************]

**4. கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடு, கட்சிகளின் இணைப்பு ஏற்படும் நேர்வில் பொருந்துறாது :**

(1) அவை உறுப்பினர் ஒருவர் தம் முதல்சார்பு அரசியல் கட்சி பிறிதோர் அரசியல் கட்சியுடன் இணையுங்கால், தாமும் தம் முதல்சார்பு அரசியல் கட்சியின் பிற உறுப்பினர்கள் எவரும்—

(அ) அந்தப் பிறிதோர் அரசியல் கட்சியின் அல்லது, நேர்வுக்கேற்ப, அவ்வாறு இணைந்ததால் உருவான புதிய அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களாக ஆகியிருப்பதாகவோ,

(ஆ) அக்கட்சி இணைப்பை ஏற்றுக்கொள்ளாது தனித்ததொரு குழுவமாகச் செயலுறுவதை விரும்பியேற்றுள்ளதாகவோ

கோருகின்றவிடத்து, 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி தகுதிக் கேடுற்றவர் ஆகார்; மேலும், 2 ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை அத்தகைய பிறிதோர் அரசியல் கட்சி அல்லது, நேர்வுக்கேற்ப, புதிய அரசியல் கட்சி அல்லது குழுவம், அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியாகவும், இந்த உள்பத்தியினைப் பொறுத்தவரை அவருடைய முதல்சார்பு அரசியல் கட்சியாகவும் அவ்வாறு கட்சிகளின் இணைப்பு ஏற்பட்ட காலத்திலிருந்து கொள்ளப்படும்.

---

1. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஒன்றாம் திருத்தம்) சட்டத்தினால் விட்டுவிடப்பட்டது.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியினைப் பொறுத்தவரை, அவை உறுப்பினர் ஒருவருடைய முதல்சார்பு அரசியல் கட்சியின் இணைப்பை, அந்தச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாதவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் மட்டுமே அக்கட்சி இணைப்பு ஏற்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

**5. விலக்கு :**

இந்த இணைப்புப்பட்டியலில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மக்களவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ அல்லது மாநிலங்களவைத் துணைத் தலைவராகவோ அல்லது ஒரு மாநிலச் சட்டமன்ற மேலவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவராகவோ துணைத் தலைவராகவோ பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒருவர்—

(அ) அத்தகைய பதவிக்குத் தாம் தேர்ந்தெடுக்கப்பெற்றதன் காரணமாக, அவ்வாறு தேர்தெடுக்கப்பெற்றதை ஒட்டிமுன்பு தாம் சார்ந்திருந்த அரசியல் கட்சியின் உறுப்பினர் பதவியைத் தம்விருப்பாக விட்டிருந்து அதன்பின்பு அப்பதவியைத் தாம் தொடர்ந்து வகித்துவரும் காலத்தில் அதே அரசியல் கட்சியில் மீண்டும் சேராதிருந்தாலும் அல்லது பிறிதோர் அரசியல் கட்சியின் உறுப்பினராக ஆகாதிருந்தாலும், அல்லது

(ஆ) அப்பதவிக்குத் தாம் தேர்ந்தெடுக்கப்பெற்றதன் காரணமாக, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்றதை ஒட்டிமுன்பு தாம் சார்ந்திருந்த அரசியல் கட்சியின் உறுப்பினராக இருப்பதை விட்டதன்பின், அவ்வாறு தாம் பதவி வகிப்பது அற்றுப்போன நிலையில் அதே அரசியல் கட்சியில் மீண்டும் சேர்ந்தாலும்

இந்த இணைப்புப்பட்டியலின்படி தகுதிகேடுற்றவர் ஆவதில்லை.

**6. கட்சிமாறுதல் காரணமாக விளையும் தகுதிக்கேடுகள் குறித்த பிரச்சினைகளின் மீது முடிவு செய்தல் :**

(1) அவை உறுப்பினர் ஒருவர், இந்த இணைப்புப்பட்டியலின்படி தகுதிக்கேடுற்றவராகிவிட்டாரா என்பது பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினை, மேலவைத் தலைவரின் அல்லது, நேர்வுக்கேற்ப, பேரவைத் தலைவரின் முடிபிற்காக வைக்கப்படவேண்டும்; அவரது முடிபே அறுதியானது ஆகும்:

*வரம்புரையாக*: மேலவைத்தலைவர் அல்லது பேரவைத்தலைவர் அத்தகைய தகுதிக்கேடுற்றவராகிவிட்டாரா என்ற பிரச்சினை எழுமிடத்து, இதன் பொருட்டு அந்த அவையின் உறுப்பினர் ஒருவரை அவை தேர்ந்தெடுத்து அவரின் முடிபிற்காக அந்தப் பிரச்சினை வைக்கப்படுதல் வேண்டும்; அவரது முடிபே அறுதியானது ஆகும்.

(2) இந்த இணைப்புப்பட்டியலின்படி அவை உறுப்பினர் ஒருவரின் தகுதிக்கேடு குறித்த பிரச்சினை எதன் தொடர்பாகவும், இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படியான நடவடிக்கைகள் அனைத்தும், 122 ஆம் உறுப்பில் குறிக்கப்பட்ட நாடாளுமன்ற நடவடிக்கைகளாக அல்லது, நேர்வுக்கேற்ப, 212 ஆம் உறுப்பில் குறிக்கப்பட்ட ஒரு மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகளாகக் கொள்ளப்படும்.

**7. நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குத் தடை :**

இந்த அரசமைப்பில் எது எவ்வாறிருப்பினும், இந்த இணைப்புப்பட்டியலின்படி அவையின் உறுப்பினர் ஒருவரது தகுதிக்கேடு தொடர்பான பொருட்பாடு எதனையும் பொறுத்து, நீதிமன்றம் எதுவும் அதிகாரவரம்பு உடையது ஆகாது.

**8. விதிகள் :**

(1) இந்தப் பத்தியின் (2) ஆம் உள்பத்தியின் வகையங்களுக்கு உட்பட்டு, மேலவைத் தலைவர் அல்லது பேரவைத் தலைவர், இந்த இணைப்புப்பட்டியலின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதற்காக விதிகளை வகுக்கலாம்; மேலும், மேலே கண்டவற்றின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் குறிப்பாகப் பின்வருவனவற்றிற்கு வகை செய்யலாம்.—

(அ) அவையின் வெவ்வேறு உறுப்பினர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் இருப்பின் அவை குறித்த பதிவேடுகளை அல்லது பிற பதிவணங்களைப் பேணி வருதல்:

(ஆ) அவையின் உறுப்பினர் ஒருவர் தொடர்பாக, சட்டமன்றக் கட்சித் தலைவர், அந்த உறுப்பினரைப் பொறுத்து 2ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின் (ஆ) கூறில் சுட்டப்பட்டுள்ள தன்மையதான மன்னிப்பு பற்றி அளிக்கவேண்டியதான அறிக்கை; மற்றும், அந்த அறிக்கை எந்தக்காலத்திற்குள், எந்த அதிகாரஅமைப்பிற்கு அளிக்கப்படவேண்டும் என்பது;

(இ) அவையின் உறுப்பினர்கள் எவரையும் அரசியல் கட்சி ஒன்றில் சேர்த்துக்கொள்வது பற்றி அந்த அரசியல்கட்சி அளிக்கவேண்டியதான அறிக்கைகள்; மேலும், அத்தகைய அறிக்கைகளை அவைப் பதவியாளர் எவருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது; மற்றும்

(ஈ) 6ஆம் பத்தியின் (1) ஆம் உள்பத்தியில் சுட்டப்பட்டுள்ள பிரச்சினை எதனையும் முடிபு செய்வதற்காக நடத்தப்படும் விசாரணைக்கான நெறிமுறை உள்ளடங்கலாக, அத்தகைய பிரச்சினையை முடிபு செய்வதற்கான நெறிமுறை.

(2) இந்தப் பத்தியின் (1) ஆம் உள்பத்தியின்படி மேலவைத்தலைவரால் அல்லது பேரவைத் தலைவரால் விதிகள் வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களிலோ மொத்தம் முப்பது நாட்களுக்கு அவையின்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த விதிகள் அந்த அவையால் மாற்றமைவுகளுடனோ மாற்றமைவுகளின்றியோ, முன்பே ஒப்பேற்பளிக்கப்படவோ அல்லது ஒப்பேற்பு மறுக்கப்படவோ இல்லையெனில், மேற்சொன்ன முப்பது நாட்கள் காலஅளவு கழிவுற்றதும், அவ்விதிகள் செல்திறம் பெறும்; மேலும், அவற்றிற்கு அவ்வாறு ஒப்பேற்பளிக்கப்படுகிறவிடத்து, அந்த அவையின் முன்பு வைக்கப்பட்ட வடிவத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் செல்திறம் பெறும்; அந்த விதிகளுக்கு ஒப்பேற்பு மறுக்கப்படுகிறவிடத்து, அவை செல்திறம் இல்லாது போகும்.

(3). 105ஆம் உறுப்பின் அல்லது, நேர்வுக்கேற்ப, 194ஆம் உறுப்பின் வகையங்களுக்கும், இந்த அரசமைப்பின்படி தாம் கொண்டிருக்கும் பிற அதிகாரம் எதற்கும் குந்தகமின்றி, மேலவைத் தலைவர் அல்லது பேரவைத் தலைவர், இந்தப் பத்தியின்படி வகுக்கப்பட்டுள்ள விதிகளை ஒரு நபர் வேண்டுமென்றே மீறுகிறார் எனில், அவர், அவையின் மதிப்புரிமையினை மீறுபவர் மீது எடுக்கப்படும் அதே நடவடிக்கைக்கு உள்ளாவார் என்று பணிக்கலாம்.

## [1][பதினொன்றாம் இணைப்புப்பட்டியல்

### (243 (எ) உறுப்பு)

1. வேளாண்மை விரிவாக்கம் உள்ளடங்கலாக வேளாண்மை.
2. நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களைச் செயற்படுத்துதல், நில ஒருங்கிணைப்பு மற்றும் மண்வளப்பாதுகாப்பு.
3. குறுநீர்ப்பாசனம், நீர் மேலாண்மை மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்கின் மேம்பாடு.
4. கால்நடைப் பராமரிப்பு, பால்பண்ணை, கோழியின் வளர்ப்பு.
5. மீன் வளங்கள்.
6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்.
7. சிறுகாடுகளின் விளைபொருள்.
8. உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் உள்ளடங்கலான சிறுதொழில் நிறுவனங்கள்.
9. காதி, கிராம மற்றும் குடிசைத்தொழில்கள்.
10. ஊரக வீட்டுவசதி.
11. குடிநீர்.
12. எரிபொருள் மற்றும் கால்நடைத் தீவனம்.
13. சாலைகள், தரைப்பாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் போக்குவரவுக்கான பிற வழிகள்.
14. மின்பகிர்மானம் உள்ளடங்கலான, ஊரக மின் வசதி.
15. மரபுசாரா எரிசக்தி வளங்கள்.
16. வறுமை ஒழிப்புத்திட்டம்.
17. முதல்நிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாக, கல்வி.
18. தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி.
19. வயதுவந்தோருக்கான மற்றும் முறைசாரா கல்வி.
20. நூலகங்கள்.
21. பண்பாடு சார்ந்த நடவடிக்கைகள்.
22. சந்தைகள் மற்றும் விழாக்கள்.
23. மருத்துவமனைகள், முதன்மை சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளடங்கலாக சுகாதாரம் மற்றும் துப்புரவு.
24. குடும்பநலன்.
25. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு.
26. ஊனமுற்றோர் மற்றும் மனச்சீர்கேடுற்றவர்களின் நல்வாழ்வு உள்ளடங்கலாக சமூக நல்வாழ்வு.
27. நலிவடைந்த பிரிவினர்களின் குறிப்பாக, பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியிலில் கண்ட பழங்குடியினரின் நல்வாழ்வு.
28. பொதுப் பங்கீட்டு முறை.
29. சமுதாய சொத்திருப்புகளைப் பேணி வருதல்.]

---

1. 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து மூன்றாம் திருத்தம்) சட்டத்தால் (24-4-1993 முதல் செல்திறம் பெறுமாறு) சேர்க்கப்பட்டது.

## [1][பன்னிரண்டாம் இணைப்புப்பட்டியல்

### (243ய–ஆம் உறுப்பு)

1. நகர்ப்புற திட்டமிடுதல் உள்ளடங்கலான நகரகத் திட்டமிடுதல்.
2. நிலப்பயன்பாட்டை ஒழுங்குறுத்துதல் மற்றும் கட்டடங்களைக் கட்டுதல்.
3. பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்குத் திட்டமிடுதல்.
4. சாலைகளும் பாலங்களும்.
5. வீடு, தொழிற்சாலை, வணிகம் ஆகியவற்றின் நோக்கங்களுக்காக நீர் வழங்குதல்,
6. மக்கள் நல்வாழ்வும் துப்புரவு பேணுதலும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை.
7. தீயணைப்பு சேவைகள்.
8. நகரகக் காணிகங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு. உயிரின வாழ்க்கைச் சூழல்களை மேம்படுத்துதல்.
9. ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் உள்ளடங்கலாகச் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கான நலன்களைப் பாதுகாத்தல்.
10. குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் தரம் உயர்த்துதல்.
11. நகரக வறுமைத் துயர் தவிப்பு
12. பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகரக வசதிகள் மற்றும் வள வசதிகள்.
13. பண்பாடு, கல்வி, கலை சார்ந்த துறைகளை மேம்படுத்துதல்.
14. புதைத்தலும், இடுகாடுகளும் எரியூட்டுதலும் சுடுகாடுகள் மற்றும் மின்சார சுடுகாடுகள்.
15. கால்நடைத் தொழுவங்கள்; விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுத்தல்.
16. பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்தல் உள்ளடங்களான பிறப்பு–இறப்பு புள்ளி விவரங்கள்.
17. தெரு விளக்கிடுதல், வண்டி நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொதுக் கழிப்பிடங்கள் உள்ளடங்கலான பொது வசதிகள்.
18. இறைச்சிக் கொட்டில்களையும் தோல் பதனிடும் இடங்களையும் ஒழுங்குறுத்துதல்.]

---

1. 1992 ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்தி நான்காம் திருத்தம்) சட்டத்தால் (1–6–1993 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.